அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

Acc. No. 18580

மலர் 2 இதழ் 5	விக்ருதி ஞூ ஆவணி மீ ஆகஸ்டு—செப்டம்பர்—1950 ஞூ	விலை அணா 2½

- Page - 177 -

இந்திரன் மகன் ஜயந்தனுக்கு நாரதர் சீக்கிரம்
சூரன் முடிவு ஏற்படுமென்று சொல்லித் தேற்றுகிறார்
(காந்தபுராணச் சித்திர விளக்கம்—15)

பொருளடக்கம்

			பக்கம்
1.	மஹா வாக்யப் பொருள்	(திருப்புகழ்மணி)	... 1
2.	666	(C. K. சுப்பிரமணிய முதலியார்)	... 3
3.	ஸ்ரீ அருணகிரி அனுபூதி	(ஸ்ரீ வத்ஸன்)	... 8
4.	கனவும் கதிர்காமனும்	(சி. ருத்திரபதி)	... 14
5.	பக்தியும் இசையும்	(வேலூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)	... 21
6.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 26
7.	கந்தரனுபூதி	(கு. தங்கவேலுத் தேவர்)	... 36

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். நான்கு வருடச் சந்தா ரூ. 5-8-0 ஆயுள் சந்தா ரூ. 25-0-0 அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ. 2-0-0 அனுப்பவும். (வி. பி. இல்லை)

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு:

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வேங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1

Sole Distributors of :—**EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS**

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ௵ ஆவணி ௴ ஆகஸ்டு—செப்டம்பர்—1950	இதழ் 5

மஹா வாக்கியப் பொருள்

(திருப்புகழ் மணி)

ஆகாசத்தில் பிறந்தது சப்தம். சப்தத்தில் பிறந்தது செவி ஆகாசத்தில் பிறந்தது வாயு. வாயுவில் பிறந்தது உணர்ச்சி, தேகஉணர்ச்சி. ஸ்பர்சம் என்பார்கள். மெய் எனும் இந்திரியம் ஸ்பர்ச தத்துவத்தின் கிளர்ச்சி. வாயுவில் பிறந்தது அககினி-அதாவது ஒளி. ஒளியின்விமர்சனம் கண். அக்கினியில் பிறந்தது நீர். நீர் என்பது ரஸதத்துவம். வாய் அல்லது நாவு என்ற இந்திரிய தத்துவம் நீருக் கிசைந்தது. "ஆபப்ப்ருதிவி"— ஜலத்திலிருந்து பூமி யுண்டாகியது.பார், மண் என்பதுக்கு உரித்தாகியது வாசனை, 'நாசி எனும் இந்திரியம். 'இந்த இந்திரியங் கள் அவையவை பிறந்த இடத்தை நாடிச் சென் ருல் சப்தத்தில் போய் அடங்கும். சப்தப்ரம்ம ஸ்வ

மலைமகள் கவுரிவி தார்ந்த மோகினி தருகோவே
யிருகத் பெற அருள் சேர்ந்து வாழ்வது மொருநாளே.

ரூபமாய் இருக்கும் ஆகாயத்தில் லயப்பட்டால் சப் தம் பிறந்த இடமாகிய ஆகாயத்துக்கு அடுத்த தனி பரம் நமது ஞான உணர்ச்சியில் தட்டும். அந்த பரத்தைச் சுட்டிக்காண்பிப்பதுதான் மஹா வாக் கியங்களின் கருத்து. ஒவ்வொரு வேதமும் ஒவ் வொரு வாக்யம் கொடுத்திருக்கின்றது. அதை நினைத்து ஒருமைப் பட்டால் பொருள் விளங்கி விடும். ஏற்கனவே ஒருவாக்கியத்தைப் பார்த்தோம். "தத்வமஸி" என்ற வாக்கியத்தின் பொருளை "நீதத்துவமாகி" என்னும் திருப்புகழில் வைத்துப் பாடியிருக்கின்றார் ஸ்ரீ அருணகிரியார். 'அயம் ஆத்மா ப்ரம்மா' என்ற தத்து வத்தைத் திருப்புகழில் அநேக இடங்களில் விளக்கி யிருக்கின்றார். 'முருகா! நீ என் அகமாய் இருக்கின்றாய்' என்றார். ஜீவன் சிவ ஸ்வரூபம் என்கின்றார். திருமூலர் "செப்பினில் ஜீவன் சிவத்துள் அடங்குமே" என்றார். "நீ வேறு எனாதிருக்க, 'நான்வேறு எனாதிருக்க நேராக வாழ்வதற்கு அருள் கூர' என்று பாடி யுள்ளார் அருணகிரியார். தெய்வ கருணையும் தெய்வ ஞானமுமாகப் பரிமளித்து வாழ்க்கையை நடத்த வேண்டுமாம். ஞானமயம் தேவம். ஆனந்த மயம் தேவம். "ப்ரஞ்ஞானம் ப்ரம்மா" என்ற வாக்கியமும் பிறந்தது. மஹாவாக்கிய பொருளே முருகன். சப்தம் பிறந்த இடம் ஆகாயம். சப்தம் அடங்கும் இடம் பரம். முருகன் நாம சப்தத்தால் ஒருமைப்பட்டு, பரத்தை உணர்மின் என்ற உப தேசத்தை அளிக்கின்றது. முருகா.முருகா.

சக்ர தரனிமு ராரி சர்ப்ப துயிலர ஞதவித்த மருகோனே
வெற்றி மலரணையில் நீயணைக்க வரவேணும்.

666

(சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் - கோவை)

ஆறுபதி யாறுமுக மாறெழுத்தே யாகக்
கூறுமவை வேலோன் குறி

தலைப்பில் மூன்று எண்கள் காண்பீர்கள். அவற்றை இடைப்புள்ளி யிட்டுப் பார்த்தால் ஆறு-ஆறு-ஆறு என மூன்று எண்களாகும். இடைப்புள்ளி யிடாது பார்த்தால் அறுநூற்றறுபத்தாறு என ஒரே எண்ணாகும். முருகப் பெருமானை உள்ளத்திலே யமர்த்தி வணங்கி இவற்றைப் பற்றிச் சில பொருள்களைச் சிந்திப்பாம். மூன்று ஆறுக எண்ணும் போது வரும் பொருள்களை மேலே கண்ட குறள் வெண்பாக் குறிக்கின்றது. முருகன் விளங்க எழுந்தருளும் **பதிகள்** ஆறு. அவரது திருமுகங்கள் ஆறு: அவரது திருவெழுத்துக்களும் ஆறு:

ஆறு-] இச் சொல் நதி என்றும், வழி என்றும் ஆறுதல் (அமைதி) என்றும், ஒரு எண் என்றும் பல பொருள்களைத் தருவது. நதிகளுட் சிறந்தது கங்கை. அதனுள் வந்து தங்கி வளர்ந்தமையால் காங்கேயன் என்று முருகனுக்குப் பெயர் வழங்குவதாயிற்று.

நல் வழியிற் செலுத்தப் பட்டால் அதன் முடிவில் அடையும் பொருளாய்த் திருமுருகாற்றுப் படையின் நுதலிய பொருளாய் உள்ளவன் முருகன். சுழலார் துயர் வெயிற் சுட்டிடும் போதும், பிறவி வெப்பில் சுழலும் போதும், ஆறுதல் அளிப்பவன் முருகன். இப்பொருள்களின் சிறப்பு எல்லாம் ஒரு புறம் நிற்க, ஆறு-என்று ஒரு எண்ணின் சிறப்பு ஈண்டுப் பேசப்படுகின்றது.

விறல்நி சாசரர் சேனைக வஞ்சப் பொருதும்வேலா
தினமு மேமிக வாழ்வுறு மின்லைபத் தருவாயே.

ஆறு-எண்] (1) பதி ஆறு: முருகனுக்கு உகந்த பதிகள் ஆறு என்று பெரியோர்களாற் கொண்டாடப் படும். அவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருஆவினன்குடி, திருஏரகம், திருக்குன்று தோறாடல், திருப் பழமுதிர்சோலை என்று குறிக்கப்படுவன. இவை இம் முறையிலேயே திருமுருகாற்றுப் படையிற் போற்றப்பட்டுள்ளன. ஆவினன் குடி என்பது பழநிப்பதியில் மலைக்குப் போகும் வழியில் உள்ள பழந்தனி ஆலயம். பழனிமலை வேறு. அஃது குருநாதர் தண்ட பாணியாய் எழுந்தருளியிருக்கிற பதி; குன்று தோறாடல் என்னும் தொகுதியுள் ஒன்று. ஆவினன் குடிதான் தனிப்படை வீடு. இது முன்னாளில் மிகப் பிரசித்தியாய் அறியப்பட்டு மக்கள் பெருந்திரளாகச் சென்று வழிபட்டு வந்த பதியாயிருந்தது. இங்கே முருகப் பெருமான் தெய்வயானை யம்மையாருடனே கூடி எழுந்தருளியுள்ளார். "தாவில் கொள்கை மடந்தையொடு சின்னா ளாவினன்குடி யசைதலு முரியன்" என்பது திருமுருகாற்றுப்படை. திருவேரகம் என்பது கும்பகோணத்துக்கு அருகில் சுவாமிமலை என விளக்கமாய் அறியப்பட்டுச் சோழநாட்டில் உள்ள பதி என்று இந் நாளில் பெரும்பான்மை அறியப்படுகின்றது. அருணகிரி நாதரும் அவ்வாறே பாடியுள்ளார். இது மலை நாட்டிலுள்ளதோர் பதி என்பர் நச்சினார்க்கினியர். (சுப்பிரமணியம் என்று பெயர் வழங்குவது). பழமுதிர் சோலை என்பது இப்போது வைணவத்தலமாக ஆக்கப்பட்டு அழகர் கோயில் என வழங்கும் பாண்டி நாட்டுப்பதி. குன்று தோறாடல்

ஆலங்காட்டில் முதிர்நட மாடுங் கூத்தர் புதல்வோனே
பழவினை பாவந் தீர்த்து னடியேனை ஆட்கொடருள்வாயே.

என்பது முருகன் எல்லாமலைகளுக்கும் உரியன்; "குறிஞ்சிக் கிழவன்" (முருகு) "சேயோன் மேயன் மைவரை யுலகம்" (தொல்-பொருள்-அகத் 5). எல்லா மலைகளையும் சேர்த்து ஒரு தொகுதியாக்கி வழிபடப்படும் படை வீடு. படை வீடு என்பது படை ஏந்திய சேனாதிபதி (முருகன்) இருப்பிடம் என்று பொருள் தரும்.

முகம் ஆறு: சிவனுக்கு ஐந்து முகம்; முருகனுக்கு ஆறு முகம் என்பது பொதுவழக்கு. சூரனுடைய தொல்லையை நீக்கும் பொருட்டுத் தேவர்கள் சிவபெருமானை நோக்கி வரங்கிடந்தனர். அவர் அறுமுகக்குமரனை அருளும் பொருட்டுத் தாமும் அறுமுகவராக வீற்றிருந்து ஆறுமுகங்களின் நீக்கண்களாறினின்றும் ஆறு தீப்பொறிகளைத் தர அவையே ஆறுமுகங் கொண்ட முருகனாய் வந்தன என்பது வரலாறு: "வெந்தகுவர்க் காற்றுத விண்ணோர் முறைக்கிரங்கி" என்பதுவரலாறு. ஐந்து முகத் தோடதோமுகமுந்-தந்து,திருமுகங்க ளாறுகிச் செந்தழற்கணுறு, மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—" (கந்தர் கலிவெண்பா); எனவே அறுமுகச் சிவனார்தாம் அறுமுகவரைத் தந்தனர். "எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த், தந்தைதன் முன்னே சண்முகம் தோன்றலாற், கந்தன் சுவாமி கலந்தங்கிருத்தலால், மைந்தனிவனென்று மாட்டிக் கொள்வீரே" என்பது திருமந்திரம்.

"நன்முக மிருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
றன்முக மாகி யுற்ற; தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்த மூவிரண் டெழுத்து மொன்றாய்
உன்மக னுமத் தோரா றெழுத்தென வுற்ற வன்றே"

குவலயம் யாவும் போற்ற குறமகள் பாதம் போற்று பெருமானே
அடிமையை நீவந் தேத்தி பரகதி தானுங் காட்டி யருள்வாயே.

"ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்

என்ற கந்தபுராணமும் காண்க,
(திருவிளையாட்டுப் படலம் 18. 19.)

சிவபெருமான் றிருமுகங்கள் ஈசானம் முதலியன வாகத் தனித்தனிப் பெயராற் சொல்லப்படுதல் போல முருகன் றிருமுகங்கள் தனித்தனிப் பெயரால் வழங்கப் படுதல் இல்லை. ஆனால் ஒவ்வொன்றுக்கும் தனித் தனிச் செயல்கள் சொல்லப்படுகின்றன. பெரிய இருளை நீக்கி உலகம் குற்றமற விளங்கச் செய்வது ஒரு முகம்; வந் தடைந்தோருக்கு வேண்டும் வரங்களை யெல்லாம் ஆசை யுடன் கொடுப்பது ஒரு முகம்; அந்தணர் வேள்விகளை விரும்பி யருளுவது ஒரு முகம்; சந்திரன் போலக் குளிர்ந்து திசைகளை விளக்குவது ஒரு முகம்; பகைவர் களை வெல்வது ஒரு முகம்; தெய்வயானை வள்ளிப்பிராட்டி யார்களுடன் மகிழ்ந்தருளுவது ஒரு முகம் என்று பெரியோர் கூறுவர். எனவே சிவபெருமானுடைய ஆறு முகம் தான் முருகப் பெருமானது ஆறுமுகமாவன. சிவனது ஆறெழுத்தே முருகனது ஆறெழுத்தாவன என்பது உட்கருத்தாகக் கொள்ளப்படும்.

"ஆறு கொலாமவர் தம்மக னார்முகம்" (அப்பர் தேவாரம்)

எழுத்து ஆறு] சிவனது ஐந்தெழுத்தே ஆறெழுத் தாகும் நிலையுண்டு. அந்த ஆறெழுத்தே முருகனது திரு நாமத்து ஆறெழுத்தாவன. " தாரகப் பிரம மாகி, முன் மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்து மொன்றாய், உன் மகன் நாமத் தோரா றெழுத்தென வுற்ற" என்றது இதனை

குவலயம் மூண்டார் கொண்டாட்டம் பெருகிய மருகோனே
நின்தாள்தந்தாட் கொண்டருள் தர நினைவாயே.

அறிவுறுக்கும். இனி, இவ்வாறெழுத்துச் சகரபுகரத் தொடக்கமும் ககர வுகரத் தொடக்கமும் உடையனவாயும் மேலும் பலவாறும் போதிக்கப்படும். அவையெல்லாம் அனுபவமுடைய தேசிகர்பால் உபதேசக் கிரமத்தில், அறியத்தக்கன.

**"உள்ள முவந், தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்
பினுடன், கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!"**

என்றதனால் ஆறுபதி-ஆறு எழுத்து என்றவற்றின் சிறப்பும் அறியத்தக்கன.

இனி ஆறு ஆறு ஆறு என்று இடைப்புள்ளியிட்டுப் பிரிக்காமற் சேர்த்து அறுநூற்றறுபத்து ஆறு என்று படிப்பதும் ஒரு சிறப்புடைத்தாகும் என முன்னே சொன்னோம்: குறியீடாக நிற்கும் ஒரு தன்மை, எண்களுக்கு உண்டு. ஒன்று : ஒன்றே பதி-கடவுள் ஒருவரே; இரண்டு : சிவமும் சத்தியும்; மூன்று : அயன் அரி அரன் என்ற மும்மூர்த்திகள் என்றிவ்வாறு பலவும் வழங்குதல் மரபு. இந்நிலையில் ஐந்து-சிவனைப் பற்றியும் ஆறு முருகனைப் பற்றியும் குறிப்புடன் வழங்குவன. ஆறு என்ற எண்ணைக் காணும்தோறும் இயல்பாகவே முருகனது நினைவு வரப் பழகிக் கொள்வது நலந்தரும். வியாபாரக் குறியீடுகளாக (trade mark) எண்களை மேற்கொள்ளும் வழக்கு இந்நாளிற் காண்கிறோம். 501-1506-18331 என்பன முதலியவை காண்க. இவற்றுள் ஒருவரது குறியீடாகிய எண்களை வேறொருவர் மேற்கொண்டால் அது நீதி மன்றத்தில் வழக்குக்கு வந்து போராட்டமாகும். ஆனால் 666 என்ற நமது முருகனது வாணிகக் குறியீட்டை எவர்

**தலைகமை பெற்றனது போத்சரண மெப்
பொழுதுநட் பொடுநினைத் திடஅருட் டருவாயே.**

மேற்கொண்டாலும் வாதம் நிகழாது நலமே தரும். இம் மூன்று எண்களையும் கூட்டினால் 6+6+6+=18 பதினெட்டு வரும். முருகனது திருமுகந்தோறும் மும்மூன்று திருக்கண்களாகக் கொண்டு பதினெட்டுக் கண்கள் என்று வழிபடும் ஒரு மரபும் உண்டு. இனி அந்த 18 ல் உள்ள எண்களைக் கூட்டினால் 1+8=9 ஒன்பது என்று வரும். ஒன்பது வரும்போது முருகப் பெருமானது துணைவர்கள் வீரவாகுதேவர் முதலிற் ஒன்பதின்மரும் நமது மனத்துள் வந்து குடிபுகுந்து நமக்குத் துணைபுரிந்து முன்னின்றருளுவார்கள்.

பின்னர் நமக்குக் குறையொன்றுமில்லை.

ஸ்ரீ அருணகிரி அனுபூதி

(ஸ்ரீ வத்ஸன்)

காப்புச் செய்யுள்

(விபூதி தியானம்)

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்."

கூறப் போகும் நூல் இனிது முடிவுபெற வேண்டி தாம் வழிபடும் கடவுளை வணங்குவதுடன், சூசகமாக அந் நூலில் கூறப் போகும் கருத்தினையும் ஒருவாறு புகுத்தித் தலைப்பில கூறப்படும் முதற்செய்யுளைக் காப்புச் செய்யுள் என்பர்.

ஆதிசொலுவென வுரைத்த ஞான குருநாதா
தாங்கள் பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே.

விபூதி தியானம் என்ற தலைப்பினைப் பெற்றுள்ளது இவரது காப்புச் செய்யுள்.

விபூதி என்றால் ஐசுவரியம். ஐசுவரியவான் ஈசன். அந்த ஈசனைப் பற்றிய தியானம், அதாவது அவ்வீசனை நம்மில் உணர ஏற்படும் வேட்கையே தியானம் எனலாம். உபநிடதங்களில் இத்தகைய தலைப்பினை "சாந்திச்செய்யுள்" என்பர். அதாவது யாதாமொரு நூலைக் கூறப் புகுமுன் அந்நூலைக் கேட்கும் சீடர்களிடமும், போதிக்கும் ஆசானிடமும் சாந்தி நிலவுவதுடன், அந்நூலில் கூறப்படும் மூர்த்தமும் (இறைவனும்) சாந்த ரூபமாகவேயிருந்து அருளவேண்டும் என்று வணங்கித் துதிக்கும் செய்யுளே சாந்திச் செய்யுள் எனப்படும்.

மூல உரை:— கனமான கல்லை யொத்த நெஞ்சம் கசிந்து உருக, செம்மையான சொற்களாலாகிய மாலையை (அணிவித்து) சிறக்கவே தஞ்சம் புகுவோரைக் காப்பது ஷண்முகனுக்கு இயல்பு. (அவ்வாறுடைய) ஐங்கரனின் பாதத்தைப் பணிவோமாக.

விருத்திஉரை:—

நெஞ்சம்: இவ்வனுபூதியின்கண் கூறப்படும் அனுபவங்களும் உண்மைகளும் ஆன்ம கோடிகள் அறிந்து உய்ய, அவரவர்கள் நெஞ்சமே முக்கிய உருபு என்றும், அஃது முறையே செம்மையாயிருந்தாலன்றி அவ்வாறு சாதித்தல் இயலாது என்பதையும் இச்சொல் சுருக்கமாகக் குறிக்கிறது எனலாம்.

திருக்குறள் பாடிய பெருமான் ஸ்ரீ வள்ளுவர், அகர முதலாகிய எழுத்துக்கும் ஆதிநாயகனுக்கும் தொடர்பு

கூறி முதற் செய்யுளைத் துவக்கினார். ஆனால் நமது அருணகிரியாரோ, அச்சொல்லைச் சொல்ல முதற் காரணம் நெஞ்சு, அதாவது மனம், ஆதல்பற்றி, அந் நெஞ்சம் என்ற சொல்லையே முதலில் வைத்து தமது கவியைத்துவக்கினார். என்னே இவர் பெருமை.

தவிர தத்துவங்கள் தொண்ணூற்றாறு. (விபரத்தை ஸ்ரீ வள்ளுவர் பாடியுள்ள ஞானவெட்டியில் காண்க) அவற்றினுள் முக்கியமானவை மனம், புத்தி, சித்தம் ஆங்காரம்என்பவை; அதனினுள்முக்கியம் மனமாகிய நெஞ்சம். இந் நெஞ்சமே ஆன்மா என்றும், ஆன்மாவே அறிவு என்றும், அறிவே கடவுள் என்றும் சித்தர் நூல்களுள் திறம்படக் கூறியிருப்பதை யறியலாம். ஆகவே கருவிகளைச் சுட்டெறித்த ஸ்ரீகந்தரின் பிரபாவத்தை அறிய அக் கருவிகளுள் முக்கியமாகிய நெஞ்சை முதலில் வைத்துப் பாடியது ஓர் தனிப் பெருமையைக் கொடுக்கிறது.

"மனத்தகத் தழுக்கறாத மவுன ஞான யோகிகள்
வனத்தகத் திருப்பினும் மனத்தகத் தழுக்கறார்"

நெஞ்சத்துள்ள மாசை அகற்றாத யோகிகள் வனத்தில் வசித்து காய் கனிகள் அருந்தி சீவித்திருப்பினும் நெஞ்சினுள்ள மாசை எங்ஙனம் களைய வல்லார் என்று சிவவாக்கியர் கூறுகிறார்.

திருவதிகை வீரட்டானத்தில் பாடும்போது இந் நெஞ்சில் இனி வஞ்சத்தை வையேன், உன்னையே வைப்பேன் என்றும்,

திரு அங்கமாலையில் "நெஞ்சே நீ நினையாய்" என்று கூறி, அந நெஞ்சைத் தூய்மை செய்து பரமனை நினைக்கு

கான கக்குற மாதை மேவிய ஞான சோறகுமார, பரா
ஞானமாகிய போத கத்தினை யேயு மாறருள் புரிவாயே.

மாறு வேண்டியும், அப்படி நினைத்தால் யாது பயன் எனிலோ,

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்"

அதாவது எவரது நெஞ்சம் தானே கசிந்து உருகி நிற்கின்றதோ, அவரது நெஞ்சில்

செம் பொனூர் புரத்தவனாகிய பரமசிவம் தானே புகுந்து நிற்பன் என்றும் கூறியுள்ளார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

"தேனார் அமுதே சிவபுரனே (நீர்)
அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெட
நீராயுருக்கி யென் ஆருயிருள் நின்றானே"

நமச்சிவாய நாதன் தாள் வாழ்க என்று பாடிய வெண்பாவில், தனது நெஞ்சிலுள்ள நஞ்சாகிய வஞ்சம் கெட, தனக்கு அருள் புரிந்து, அந் நெஞ்சை நீராயுருக்கித் தன்னுள் ஆருயிராய் நிற்குமாறும்,

இரும்பு நெஞ்ச வஞ்ச னேனை
யாண்டு கொண்டு நினது தாட்............

இரும்பை யொத்த நெஞ்சைப் படைத்த வஞ்சகனாகிய என்னை ஆண்டு கொண்டு, உமது பாதங்களில் சரண் அடைந்தஎன்னைக் காப்பாற்றுவீராக என்றும், சிவபிரானை வேண்டுகிறார் நமது மாணிக்கவாசகப் பெருமான்.

நெஞ்சறி விளக்கம் பாடித் தந்த ஸ்ரீ கணபதி தாஸர், "கல்லிலே தெய்வமில்லை கருத்திலே தெய்வம் நெஞ்சே," அதாவது பிரவிருத்தி மார்க்கத்தில் கல்லிலும் செம்பிலும் எம்பெருமானை வணங்கினாலும் நிவிர்த்திமார்க்கத்தில்

பத்த ருக்கு வாய்த்த பெருமானே, இக்கடத்தை நீக்கி
அக்கடத்துளாக்கி இப்படிக்கு மோக்ஷம் அருள்வாயே.

கருத்தாகிய நெஞ்சில் அவன் குடியிருக்கிறான். ஆகையால் நெஞ்சைத் தன்வயப் படுத்துங்கள் என்கிறார்.

மேலும் நெஞ்சமாகிய இப் பெருங்கயத்தில் (குளத்தில்) வஞ்சமாகிய சுழியில் நான் அகப்பட்டுத் தவிக்கும் போது உமது பஞ்சக்கரம் தோன்றி என்னை அருளட்டும் என்று ஸ்ரீ அப்பர் சுவாமிகள் கூறுகிறார்.

நெஞ்சு நினைந்து தம் வாயாற் பிரான் என்று
துஞ்சி, துணைத்தாள் சரண் என்று தவழப்போது
இறைவன் அருள் பெறலாமே. (திருமூலஸ்வாமி)

நெஞ்சினால் நினைந்து, நினைந்து, நெக்குருகி, தமது வாயால் அலறி என்னை வாழ வித்தவா, எனது இறைவா என்று வணங்கித் துதித்து, சரண் (தஞ்சம்) அடைந்தவரைக்காப்பாற்றும் இயல்பையுடைய அந்த உற்ற துணையுமாகிய பாதங்களில் சரணம் சரணம் என்று அழுது புரண்டால், அப்போது அல்லவோ அவ்விறைவன் அருளைப் பெறலாம் - என்று வெகு அழகாகக் கூறியுள்ளார் திருமூலஸ்வாமியும். இக் கருத்தைத்தான், நமது அருணகிரியார் இக் காப்புச் செய்யுள் மூலம் அறிவிக்கிறார்.

இவர்கள் யாவரும் கூறியதிலிருந்து நெஞ்சம் ஓர் கடினமான தலம் என்றும், அது நஞ்சாகிய வஞ்சகத்துக் கிருப்பிடம் என்றும், வஞ்சகம் கெட்டு நல்லறிவு ஏற்பட நெஞ்சம் உருகவேண்டும் என்றும் தெரிகிறது. மேலும் அப்பர் சுவாமிகள நெஞ்சை ஓர் கயத்துக்கும் உவமை கூறி அக் கயத்தின்கண் உள்ள நீர்ச்சுழியே வஞ்சம் என்றும், அதனின்றும் தப்புவிக்க ஐம்பொறியும் புலன்

ஆசைப்பத மேல் புத்திமெய் குளத்துட னேபத்திர
மாகக் கோல வேழுத்தியை யருள்வாயே.

களும் தன் வயப்பட்டு அதினின்றும் நெஞ்சமும் தன் வயப்படல் முறை என்றும், அவ்வாறு ஏற்பட பரமன் அருள் வேண்டும் என்றும் கூறுகிறார்.

நமது அருணகிரியார் மேலே கண்டபடி நெஞ்சை கல்லுக்கு மட்டில் உவமை கூறி, அது உருகி செம்மைப்பட பஞ்சக் கரமாகிய ஐம்பொறி புலன்கள் நேர்மையிடல் அவசியம் என்ற கருத்தை இச் செய்யுளில் கூறுகிறார்.

மேலும், சிறுமையை யடைந்த ஒருவர்பால் மற்றவருக்கு இரக்கம் அல்லது அனுதாபம் ஏற்படாவிடில், அப்போது "உன் நெஞ்சம் என்ன கல்லோ, இரும்போ." என்று கூறுவதை வழக்கத்தில் யாவரும் அறிவர்.

இப்படிப் பல துறையிலும் நெஞ்சம் ஓர் கல், ஓர் இரும்பு, என்றும், அது வஞ்சத்துக் கிருப்பிடம் என்றும் ஏன் கூறினார்களென்று அருணகிரியாரோ அல்லது அப்பர் சுவாமிகளோ விளக்கியதாகத் தெரியவில்லை. ஆனால்,

"வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்"

என்று மாணிக்கவாசக சுவாமிகள் மட்டில் காரணம் கூறியுள்ளார். அதாவது,

இச் சரீரம் என்பது ஓர் க்ஷேத்திரம் அல்லது பூமி என்றும, அஃது 96 தத்துவங்கள் அடங்கியது என்றும், அதனுள் முக்கியமானது நெஞ்சம் அல்லது மனம் ஆகையால் அந் நெஞ்சை ஓர் பூமிக்கு அல்லது கடினமான தலத்துக்கு உவமை கூறினர். பூமி மட்டில் இருந்தால் யாது பயன்? அதை உழுது பண்படுத்தியமைக்கத் தண்ணீர் அல்லவா வேண்டும். அத்தண்ணீரும் பரமன் அருளால் நன்மாரியாகப் பெய்யாவிடில் எங்ஙனம் கிட்டும்.

வாராய் மனக்கவலை தீராய் எனத் தொழுது
வாரே னெனக்கு மெதிர் வரவேணும்.

ஆகவே, அப் பூமியில் பரமனருளால் தண்ணீர் பாயாத வரையில் அது ஓர் கல்லே. அதனால் யாது பயனையும் பெற்முடியாது அன்ரே. அவ்வாறே மானிடராகப்பிறந்து, அங்கக் குறைவுகளின்றி நல்லுடம்பு பெற்று, நெஞ்சமும் பெற்றிருப்பினும், அஃதில் பரமன் அருளாகிய அமுத நீர் பாயாவிடில் அந் நெஞ்சு ஓர் கல்லே; அம்மனிதனும் ஓர் கல்லே என்று வெகு நுல்லியமாகக் கூறிவிட்டார் மாணிக்கவாசகப் பெருமான்.

இனி அப்பர் சுவாமிகள் நெஞ்சை ஒரு நீர் தேக்கத்திற்கும், அதிலுள்ள ஓர் சுழலே வஞ்சத்திற்கும் ஒப்பிட்டாரன்ரே? அது எவ்வளவிற் பொருந்தும் என்பது இவரது நூல்கள் வாயிலாக வெளிப்பட அறிய முடியவில்லே. ஆனல் சித்த புருடர்கள் இயற்றிய நூல்கள் வாயிலாக சூசகமாகவேனும் அறியமுடியுமா என்பதைப் பற்றி அடுத்த சஞ்சிகையில் கவனிப்போம்.

செந்திலாண்டவன் சேவடித்துணை

கனவும் கதிர்காமனும்

வித்துவான் சி. ருத்திரபதி M. A.

இளவேனிற்காலம். காற்று மென்மையாக வீசிய வண்ணம் இருந்தது. இரவு பத்து மணியாயிற்று. வழக்கம் போல் கண்கள் நித்திரையின்பொருட்டுச் சுழல ஆரம்பித்தன. படுக்கையை விரித்தேன். சில நிமிஷநேரம் முருகப் பெருமானை மனக்கண் முன்னிறுத்தி தியானித்துவிட்டுப் படுத்து நன்ருக வுறங்கினேன். விடியற்காலம் சுமார்

அடியனிரு வினைநிரய படஅமா ரிதுபுரை
அதிசயமெ வருள்பாட வரவேனும்.

ஐந்துமணியிருக்கும். நல்லதோர் கனவுகண்டு விழித்தேன். அக்கனவுதான் என்னையோவெனின், இராமேஸ்வரத் தருகே நீலத்திரைக் கடலில் படகு ஒன்று நின்றது. அதில் யான் ஏறி இலங்கை நோக்கிச் சென்றேன். இலங்கையில் ஒரு மலை தோன்றியது. அதனடிவாரத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமத் விபுலானந்த சுவாமிகள் காவியுடை தரிதது, புன்னகை தவழ நின்று, என்னை நோக்கி "ஒல்லையில் வா" என்றழைப்பதுபோல் நின்றார். அவரை யணுகி அவர் எனது பேராசிரியராதலான், முறையே வணங்கி, மலையில் ஏறினேன். அங்கு ஒரு யானை வரக்கண்டு அஞ்சி யொதுங்கி, மலையின் மேலுள்ள ஒற்றையடிப்பாதை வழியே சென்றேன். அவ்வழியில் கன்னி யொருத்தி வரக் கண்டு, விலகிச் சென்றேன். விழித்தெழுந்தேன். கனவிடைக் கண்ட காட்சியின் பொருளை யறிய முயன் றேன். துறவியின் கோலத்திலோ,புலவர் கோலத்திலோ, கனவிடை வருபவர் முருகப்பிரான்தான் என்பது யான் அறிவேன் கடலைத் தாண்டிச் செல்வதுபோல் தோன்றி யதால், யான் கண்ட முருகன் இலங்கைத் தீவில் பிரசித்தி பெற்ற கதிர்காமத்தில் கோயில் கொண்டருளியிருப்பவன் என்று ஊகித்து, எளியேனை ஈர்த்து ஆட்கொள்ளும் பொருட்டுக் கனவிடை யெழுந்தருளினன் என்று எண் ணியதோடு, அண்மையில் தனது கோவிலுக்கு வருமாறு செய்வான் என்றுந் துணிந்தேன்.

காலையில் எனது மனைவியிடம் யான் கண்ட கனவை யும் அதன் பலனையும் சொல்லி மகிழ்ந்தேன். இக்கனவு கண்டது இளவேனிற்காலம் என்றேன். மார்ச்சு மாதம்

நோடி மறையும் பொய்ப் பவுஷோ டுழல்வது
விடவும்பர்க் கரிதா மிணையடி தருவாயே.

முதல் வாரம். ஒரு மாதத்திற்குப் பிறகு இலங்கையின் ஒரு பகுதியாகிய யாழ்ப்பாணத்தினின்றும் ஓர் அழைப்பு வரப் பெற்றேன். அதில், ஸ்ரீ விபுலானந்த சுவாமிகளின் நினைவுத் திருநாள் ஏப்பிரல் மாதம் 23, 24, 25 - தேதி களில் கொண்டாடப் பெறும் என்றும், அதில் இரண்டு விரிவுரைகள் நிகழ்த்தவேண்டும் என்றும் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்களால் தெரியக்கண்டு உளம் பூரித்தேன். கதிர்காமன் திருவருளை யெண்ணி ஆனந்தக் கண்ணீர் உகுத்தேன். உடனே அழைப்புக்கிணங்கி "கதிர் காமன் அருள் போலும்" என்றெழுதி வருவதாக ஒப்புக் கொண்டேன்.

ஏப்பிரல் மாதம் 23-ம் தேதி சென்னையினின்றும் வானவூர்தி வழியே சென்றேன். சுமார் ஒரு மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள காங்கேசன் துறையை அடைந்தேன். என்னையும் என்னுடன் வந்த அன்பர் குழாத்தையும் எதிர்கொண்டழைக்கப் பலர் 'மோட்டார் கார்'களுடன் வந்திருந்தனர். அவர் தம் பொறிவண்டிகளில் புகுந்தோம். யாழ்ப்பாண நகருக்குள் சில நிமிஷங்களில் போய்ச் சேர்ந்தோம். சிறந்தவொரு மாளிகை யொன்றில் எங்களை இறக்கினர். உடனே இனிய பண்டங்கள் பல எம்முன்கொண்டுவந்து வைக்கப் பெற்றன. அவற்றை யருந்தி தேநீரும் குடித்து மகிழ்ந்தோம். மாலை சுமார் 4 மணிக்கு யாழ்ப்பாண ஆறுமுக நாவலர் வித்தியா சாலை என்ற இடத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றோம். அங்குத்தான் விபுலானந்த அடிகள் நினைவுத் திருநாள் மிக விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது.

பரஞான தீப விளக்கம் காண எனக்கு
உன் சீதள பத்மந் தருவாயே.

அப்பள்ளியில் நுழைந்ததும் கொழும்பு நகரத்தினின்றும் தந்தியொன்று என்னை அங்கு விரிவுரை புரிய வரவேண்டுமென்று வந்தது. அதுவும் கதிர்காமன் திருவருள் என்று எண்ணி அதையும் ஒத்துக்கொண்டு தந்தி கொடுத்தேன். யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்களும் நினைவுத் திருவிழா இனிது நடைபெற்று நிறைவேறிற்று. அந்நகரத் தமிழர்கள் என்பொருட்டும் என் தோழர் பொருட்டும் நடத்திய பேருண்டி விருந்திற்கும், சிற்றுண்டி விருந்திற்கும், கணக்கில்லை. அவர்கள அன்பு அபரிமிதமானது. மகாநாடு முடிந்ததும் கொழும்பிற்குப் புறப்பட்டேன். என்னுடைய வற்புறுத்தலின் மேல் எனது அன்பர் ஒருவர் மாத்திரம் திரு, வெள்ளைவாரணம் என்பவர் என்னுடன் கொழும்பிற்கு வந்தார். 26-4-49-ல் காலையில் கொழும்பு போய்ச்சேர்ந்தோம். புகைவண்டி நிலயத்திற்கு மோட்டார் வண்டியுடன் அவ்வூர் பிரபல வியாபாரியும் சைவத தொண்டும் தமிழ்த் தொண்டும் ஒருங்கே புரிந்து வரும் ஸ்ரீமான் S. சுந்தரம் என்பவர் வந்து எங்களை, மாலை சூட்டி வரவேற்றுத் தம் அரண்மனை போன்ற இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

அன்று மாலை விவேகானந்தர் கழகத்தில் 'திருவாசகத்தைப்பற்றி ஒரு மணிநேரம் பேசினேன். ஆயிரம் பேர் இருக்கலாம். யாவரும் மகிழ்ந்தனர். மறுநாள் 'சைவ நன் மங்கையர் கழகத்தில்' "சிலம்பின் வென்ற சேயிழை நங்கை" யென்னும் பொருள்பற்றி கண்ணகியின் கற்பு மாண்பை விரித்துரைத்தேன். கொழும்பு சென்றதும் ஸ்ரீ சுந்தரம்பிள்ளையிடம் கதிர்காமம் செல்ல வேண்டுமென்

நாயேனை யடிமை யாமென மகிழ்மெய் ஞானமு மருள்வோனே
சிவமகிழ வேபெற அருவி யேயிணை யடிதாராய்.

னும் அவாவைத் தெரிவித்திருந்தேன். மறுநாள் 28-4-49ல் மூன்று மோட்டார் வண்டிகள் கதிர்காமம் நோக்கிப் புறப்பட்டன. என்னுடன் அங்குள்ள சிலரும், என் நண்பரும் கதிர்காமன் தெரிசனத்திற்குப் புறப்பட்டனர். இசையிலும், இறையன்பிலும் சிறந்த ஸ்ரீமதி காஞ்சன மாலையம்மையாரும் அவர்தம் கணவரும் எங்கள் குழுவில் கலந்து கொண்டார்கள். குருவாரம் சுமார் 1 மணிக்குப் புறப்பட்டோம். இரவு ஒரு மணிக்குக் கதிர்காமத்தி னருகே போய்ச் சேர்ந்தோம். சுமார் ஒரு மைலுக்கு இப்பால் மூன்று வண்டிகளையும் நிறுத்திவிட்டுக் கால்நடையாக எல்லோரும் நடக்க ஆரம்பித்தோம். இருள் சூழ்ந்திருந்தது. அடர்ந்த காடு. வானளாவிய மலைகள். அருவிகள் ஒலித்தவண்ணம் ஓடிக்கொண்டிருந்தன. அப்பொழுது காட்டில் ஒரு யானை நீரில் விழுவதைக் கண்டோம். உடனே ஒரு புத்துணர்ச்சி யேற்பட்டது. "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு" என்று தொடங்கும் திருமுருகாற்றுப் படையை யென்னுடன் வந்த அன்பர் திரு வெள்ளை வாரணம் பாட ஆரம்பித்தார். யாவரும் அதையே பின்பற்றிப் பாடினோம். இடையிடையே "கதிர்காமனுக்கு அரோஹரா, அரோஹரா", என்று முழங்கிக் கொண்டு மனிதசஞ்சாரமில்லாத காட்டின்வழியே சென்றோம். மரத்தால் செய்யப் பெற்ற ஆடும் பாலம் ஒன்று, அவ்வூரருகே ஓடும் மாணிக்கக் கங்கையின் மேல் போடப்பட்டிருந்தது. அங்கு நாங்கள் இரவு 2 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். அதைத் தாண்டி கதிரகாமம் என்னும் சிற்றூர் போய்ச்

கடலுள நடிய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே.

சேர்ந்து, அங்குள்ள பூசாரி (சுப்பராவே என்பவர்) வீட்டில் சிறிது கண்ணயர்ந்தோம். சுமார் 4 மணிக்கு கோயில் மணிச் சத்தம் கேட்டது. எழுந்தோடினோம். கோயில் முன்னால் திரை போடப்பட்டிருந்தது. அதில் முருகன் பால சுப்பிரமணிய வடிவத்துடன் மயில் சகிதமாய்க் காட்சியளித்தான். திரைக்கு வெளியே நின்றுதான் யாவரும் முருகனைத் தரிசிக்க வேண்டும். உள்ளே யாரையும் விடுவதில்லை. ஆகவே நாங்களும் அங்கு நின்று தியானித்தோம். வாயார வாழ்த்தினோம். உள்ளே சென்ற பூசாரி வெளியே தீபத் தட்டோடு வந்தான். தீப தரிசனம் செய்தோம். பிரசாதம் வழங்கினான். பெற்றோம். புசிக்கவில்லை. காரணம், நாங்கள் படுக்கையைவிட்டு அப்படியே காலைப் பூசைக்கோடியதே. பின்னர், அங்கிருந்து மூன்று மைல் தூரத்தில் இருக்கும் செல்லக் கதிர்காமம் போக விரும்பினேன். என்னுடன் வர இசைந்தவர், திரு. வெள்ளைவாரணம், திருமதி. காஞ்சனமாலையம்மையார் இருவருமே. ஏனையோர் அங்கே தங்கியிருந்தார். மூன்று மைல் தூரமும் காடு. கொடிய மிருகங்கள் சஞ்சரிக்கின்றன. ஆனால் "அரோஹரா" என்றால் அவைகள் யாருக்கும் எந்த விதமான ஊறும் இழைப்பதில்லை. அம்மாதிரியே முருகனைத் தியானித்துக் கொண்டும், அவன் திருப்புகழைப் பாடிக்கொண்டும் போய்ச் சேர்ந்தோம். அங்கே விநாயகப் பெருமான் வீற்றிருப்பதைக்கண்டோம். மாணிக்கக்கங்கை மலையிடையும்,மரங்களிடையும் சல சலவென்று ஓடி வருவதைப்பார்த்து மகிழ்ந்து அதில் வீழ்ந்து மூழ்கி அகமாக, புறமாக

பரிவால் சத்துப தேசிக்கும் குரவோனே
உன் செயலால் அற்புத ஞானத்தின் கழல் தாராய்.

என்னும் இரண்டு அழுக்குகளையும் போக்கிய பின்னர், விநாயகப் பெருமானைத் தரிசித்தோம். பின்னர் மீண்டும் சதிர்காமத்திற்குப் பதினொன்று மணிக்கு உச்சிக்கால பூசை வேளைக்கு வந்து முருகப்பிரானைத் தரிசித்தோம். அதனருகே யிருந்த வள்ளி தெய்வயானை, பால்குடிபாபா, முத்துலிங்கசுவாமிகள் முதலிய சந்நிதிகளில் நின்று வணங்கி, நண்பகல் உண்டி அருந்தி, பிற்பகல் கதிர்காமனிடம் விடை பெற்றுக் கொழும்புக்குப் புறப்பட்டோம் கதிர்காமத்தின் அருகே யிருந்த கதிரை மலையைக் கீழே யிருந்து வண்ணம் வணங்கி, மீண்டு கொழும்பு வந்து, அன்றிரவு கொழும்பி னருகே ஓரூரில் தங்கி மறுநாள் கொழும்பு வந்து அதற்கு மறுநாள் கொழும்பினின்றும் சென்னைக்கு வானவூர்தி வழியே மீண்டோம். விரிவஞ்சி பல விஷயங்களையும், சில கனவுகளையும், சில அரிய தெய்வீகக் காட்சிகளையும் இங்குக் குறிக்காது விட்டேன். கதிர்காமத்தைச் சுற்றிப் பத்துமைல் வரையில் முருகப் பிரான் நினைவு தவிர வேறொன்றும் ஏற்படாது. கலியுக வரதன். எல்லா மதத் தினரும் அப்பொருளை வணங்குகின்றனர். பூசை செய் பவர் பௌத்த மதத்தினர். வள்ளியின் வமிசமென்று கூறிக்கொள்ளுகின்றார். வாசகர்களே, என் கனவு நன வாயிற்று. யான் கண்டுவரும் கனவுகளில் ஒன்றைக் கூறினேன்.

வாழ்க முருகன்! வாழ்க அன்பர்!

பச்சையுமை ஓர் புறத்தருள்சீ காமணிக்கடவுள் தந்த சேயே
முத்திபெற விடவித்து மயிலாடு சுத்தவொளி சித்தியாதோ.

பக்தியும் இசையும்

கீழ்வேளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை

ஸ்ரீ தியாகராஜ தெய்வீக இசைப் பொருள் விளக்கம்

29-வது கர்த்தா

ராகம்: சங்கராபரணம் *தாளம் : ஆதி*

இரண்டுகளைச் சவுக்கம்

அரை இடத்தில் ஆரம்பம்

ஸம்பூர்ண ராகம்
ஸர்வ, ஸ்வர, கமக ஆ : *ஸரிகமபதநிஸ்*
வரிக, ரக்தி ராகம் அ : *ஸ்நிதபமகரிஸ*

இந்த ராகத்தைத் தமிழர்கள் செம்பாலைப் பண்
என்று குறிக்கின்றார்கள்.

ஷட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், ஸுத்தமத்யமம், பஞ்சமம், ஸதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம், ஷட்ஜம். இதுபோன்றே அவரோஹணத்திலும் எல்லா ஸ்வரங்களும் வரும்.

பல்லவி

8 8 8
ஸ்வர ராக ஸுதா ரஸ யுத பக்தி
8 3
ஸ்வர்க்க அபவர்க்க முரா ஓமனஸா—ஸ்

அனுபல்லவி

8
பரமானந்த மனே கமலமுலை
8 8
ப கபேகமு செயனேல ஓமனஸா—ஸ்

கேசவனார் சகோதரி நாதர் பாகம் விடான் சிகமணி உமைபாலா முடனே காரிர் பாருமை யாசி வரபத மருள்வாயே.

சரணம்

8 8
மூலாதாரஜ நாத மெறுகுடே
8 8
முத மகு மோக்ஷமுரா
8
கோலா ஹல ஸப்தஸ்வர குருத்தே
மோக்ஷமுரா ஓமனஸா—ஸ்

இந்தக் கீர்த்தனத்திற்கு இன்னும் சரணங்கள் உள்ளன ஆயினும் நமக்கு வேண்டிய கருத்திற்கு ஒவ்விய சரணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு உள்ளேன். மற்ற விவரங்கள் என்னல் 'பாரததேவி'யில் எழுதிக்கொண்டு வரும், தியாகராஜ உள்ளம் என்னும் இசை விளக்கத்தில் பார்த்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்வர ராக ஸுதாரஸ யுத பக்தி : முதலில் தோன்றிய நாதமானது வரிவடிவத்தில் இணைந்து ஸ்வரங்களாக ஆகி, தனித்தனி ஏழு வரங்களாக ஒலித்து அதுவே தனது உட்பகுதியில் தொண்ணூற்று நுட்ப ஒலிகளாக நுணுகிஅமைந்து அதுவே ராகமென்கிற ஸ்வரக்கோர்வையில் நின்றுபடர்ந்து ராகமாக ஆகி,அந்தராகங்களினல்வரும் நவரஸ இன்பங்களுப ஒவ்வொரு ரஸ உட்பகுதி இன்பங்களும், ஆகிய இன்பங்களினல் கிடைக்கப்பெறும் ஆனந்தமாகிய இன்ப பக்தியானது (ஸ்வர்க்க அபவர்க்கமுரா ஓமனஸா) மோக்ஷ இன்பத்தில் கிடைக்கும் ஆனந்தத்திற்கும், இவ்வுலக நன்மார்க்க இன்பத்தில் கிடைக்கும் ஆனந்தத்திற்கும், ஸமமானதடா ஏ மனமாகியவனே.

பரம ஆனந்தமனே கமலமுபை பகபேகமுஸேயனேல: தாமரை மலரின் பக்கலில் தண்ணீர் நிறைந்த தடாகத்தில்

கடல் சூர்க்கீ தூள்பட கண்ட வேலா
உன்னிடத்துத் தாள்பெற ஞான சதாசிவ அன்புதாராய்.

தாமரையிலையின்மேல் இருந்துகொண்டு அந்தத் தாமரை மலரில் உள்ள மகரந்தம் என்கின்ற தேனை அருந்தத் தெரியாது, வேறு எங்கிருந்தோ வரும் வண்டானது அந்தத் தேனை எடுத்துக்கொண்டு சென்று தான் அருந்தி மகிழும் போது, தவளையானது எப்படிப் பக்கலில் இருந்தும் அநுபவிக்கத் தெரியாது ஏமாந்துபோகிறதோ, அது போன்று, பரம ஆனந்தமாகிய இந்த இசை அமுதத்தை அருந்தி, மனத்துள் பக்தி எய்தி, இறைவனை அறியத் தெரியாது, அந்தத் தவளையைப்போல் ஏமாந்து போகிறாயே மனமே.

இன்னும், **மூலாதாரஜ நாத மேறுகுடே** மூலாதாரத்தில் இருந்து பிறக்கப்படுகின்ற நாத அழகானது, **முதமகு மோக்ஷமுரா :** மிகவும் பேரின்ப போதையான மோக்ஷ இன்பத்திற்கு ஒத்ததானதாயிற்றே மனமே ; **கோலாஹல ஸப்தஸ்வரகுருத்தே மோக்ஷமுரா ஓ மனஸா) :** இந்த ஸ்வரங்களின் நுண்ணிய ஒலிகளிலெல்லாம் நுழைந்து தாவிப் படர்ந்து ஒலிக்கும் ஸப்த ஸ்வரங்களால் ஆக்கப் பட்ட ராக இன்பப் பொலிவின் இன்ப நுகர்ச்சியேதான் மோக்ஷமென்கிற இன்பமடா, ஏ மனமாகியவனே என்கிறார் தியாகப்ரும்மம்.

இதன் கருத்து

எந்த மொழியின் தயவும் இல்லாது, தானே தனித்திலங்கி, தன்னுடைய ஏழு ஸ்வர வரிவடிவ முழு உடம்பாகிய நிலையிலும் தன்னின் உட்பகுதியாகிய தொண்ணூற்றாறு நுண்ணிய ஒலி உருவ வகையாலும், இலங்கப்பெறு

மாகரி காண நேர்வரு திருமால் நாரணன் மருகோனே
உனதடியாராகிய மோன ஞானிகளுடனே சேரவு மருள்வாயோ

கிற அநேக பாவங்களையுடைய ராக, நல்ரஸமாகிய, நல்
இன்பமே மனிதனுக்கு பக்தியை உண்டாக்கி, இதுவே
மோக்ஷ இன்ப அனுபவத்தையும், உலக இன்ப, ஒலி
நுகர்ச்சி இன்ப அனுபவத்தையும் தந்து மனிதனைப்
பாவனப்படுத்திவிடும் என்பது தியாகப்ரும்மத்தின் அனு
பவ பூர்வமான உபதேச நல்லுரையாகும்.

மற்றும் இந்த ஸப்த ஸ்வரங்களும் உண்டாவதற்கு
முதற் தோற்றமாய் வரும் மூலாதார ஸ்தானத்தில் இருந்து
முதலாகத் தோன்றி ஒலிக்கும் நாதமே மோக்ஷ இன்பத்
தைக் கொடுக்கவல்ல தன்மை உடையதடா என்றும்
இதை முதலாகக்கொண்டு ஏழுஸ்வரங்களாய் முடிந்து
அதன் உட்பகுதி ஒலிகளால் வரும் ராக இன்பமும்,
மேலுலக இன்பத்தையும், கீழ் உலக இன்பத்தையும்
கொடுக்க வல்லதடா என்றும் குறிக்கின்றார்.

இதனுள் மறைந்த கருத்து ஷட்ஜம், என்னும் முதல்
தோற்ற ஒலி ஸதாசிவ தத்துவமாகும். அதனாலேயே
மோக்ஷ இன்ப நுகர்ச்சி என்றும், மற்ற ஆறு ஸ்வரங்
களும் இதனுள் கலந்த முதற் சத்தத்தின் இணைப்புக்களால்
வரும் ராகங்கள் மனிதனுக்கு உலகில் இயற்கையாக வரும்
நவரஸ பாவங்களையும் தந்து பரமானந்தத்தைத் தரும்
என்கிறார்.

இசைக்கலை நிகழ்ச்சியில், இகநாதம், பரநாதம்,
என்று இரு உணர்ச்சி நாத இயக்கமும் உண்டு என்னும்
இந்த உண்மையையும் இங்கு விளக்குகிறார்.

ஆதலால் இவ்வளவு உயர்ந்த மார்க்கம் உன்பக்கத்தி
லேயே இருக்கும்போது நீ அந்தத் தவளையைப்போல்

**தாருகன் மாமுடி துள்ள வேல் தொட்டேவிய சேவக முருகோனே
முக மாறும் உன் உள்ள ஞானப் போதமு நீதர வருவாயே.**

ஏமாந்து இதை விட்டுவிட்டு எங்கெங்கோ, தவளை தண்ணீருக்குள் மூழ்கி அவதிப்படுகிறதே அதுபோன்று பலப்பல மொழிகளின் சொல்லில் ஏதோ பக்தியைப்பற்றி பேசி இருப்பதாக நினைத்து வார்த்தையைத் தேடி அலைகின்றாயே மனமே, அங்கெல்லாம் போக வேண்டாம் வண்டானது எப்படிப் பறந்துவந்து தாமரை மலரில் உள்ள தேனை எடுத்துக்கொண்டுபோய் அனுபவித்துவிடுகிறதோ, அதுபோன்று உன் பக்கலில் உள்ள ஒலிநயத்தின் வாயிலாகவே இந்த பக்தியை அடைவாய் மனமே என்கிறார் தியாகப்ரும்மம். இந்தத் தத்துவத்தை இன்னும் சிறிது நாம் நுணுகிப் பார்ப்போமானால், இன்னொரு நுண்ணிய விளக்கமும் கிடைக்கின்றது. மனத்திற்குக் கீழ்ப் பகுதியில் நாதம் உண்டாகிற மூலாதார இடமும், மனத்திற்கு மேல் பகுதியில் அதே அளவு உடைய இடத்தில் ஒலி உண்டாகும் குரல் இடமும் உள்ளன; ஆனால், மனத்திற்கு எவ்வளவோ அதிக தூரத்தில்தான் சொற்களை உச்சரிக்கும்நாக்கு, உதடு, பல், மூக்கு போன்ற கருவிகள் உள்ளன. ஆதலால் பக்கலில் பேரானந்த இடங்கள் இருந்தும், அது தெரியாது வார்த்தைகளில் பக்தி உண்டாவதாக எண்ணி நாம் அலைகின்றோம் என்பதும் இதனால் பெறப்படும் அதி நுட்பப் பொருளாகும். ஆகவே பக்தி ஏற்படுவதற்கு மொழிகளைவிட ஸர்வ ஜீவராசிகட்கும் ஒலிநய, பாவ, இசை, இயக்க மார்க்கமே சாலச் சிறந்ததென்பது தியாகப்ரும்மத்தின் உண்மையுணர்ந்த மறுக்க முடியாத உபதேசமாகும். கவனிக்கவும.

மாதைக் காதலித்து வேடக் கான கந்து வருவோனே
தாபமிக்க தீமைக்கு ஆவிதப்ப நேரிதாராய்.

சங்கராபரண ராக அர்த்தபாவ தத்துவம்

இந்த ராகமானது சில பாவங்களைத் தனக்கு இலக்காகக் கொண்டாலும் இதனுள் மிகுந்த அன்புகலந்த மனப்பாங்கில் ஒருவர்க்கு உபதேசித்து, இதுவே முடிந்த முடிபு, இன்னும் உனக்குச் சொல்ல மார்க்கம் இல்லை. ஆதலால் நீ இதையே பின்பற்றி நட; இல்லையானால், கெட்டுப் போவாய் என்று அன்போடு மிகவும் இனிய முறையில் எடுத்துரைக்கும் உணர்ச்சி பாவ இயற்கையாகும். இது தாயன்பு கரிசனக் கடமை ஆகும்.

தாள, கால, கதி, இட, தத்துவ இலக்கணம் :

இந்த உபதேசத்தை சமநோக்குடன், சம அக்ஷர அளவில்; **காலம்**, இதை மிகவும் நிதானமான உள்ளப் போக்கில் விவரமாகச் சொல்லியும், **கதி**, சத்வகுண அழகில் மிகவும் அமைதியாகச் சொல்லி, சதுஸ்ர எண்ணிக்கை கதியில் சொல்லி, **இடமும்** சதுஸ்ர பாகமான இரண்டு மாத்திரைகள் தள்ளி சதுஸ்ரத்தின் சமபாதி எண்ணிக்கை கொண்ட மென்மைக்குண உணர்ச்சிப் பண்பில் அன்பாக உரைத்து, இயல், இசை, லய, கதி, தாள, பாவ, இலக்கணங்கள் பொருந்த உபதேசித்துள்ளார் **த்யாகப்ரும்மம்.**

கந்தர் கலிவெண்பா

ரசபதி

உலக படம்.

மலர்கிறது ஆண் மலர். என்ன கம்பீரமான எழில்! விறு விறு என்று காற்றும் வீசுகின்றது. அசைந்து ஆடுகின்றது அந்த மலர். அதனில்வந்து தங்குகின்றது வண்டு.

மயில் மாமிசை பக்கத்தே குறமாதொடு சீர்பெறு பெருமானே
பராபர சொர்க்கப் பூமியில் ஏறிடவே பதமருள்வாயே.

சிறிது பொறுத்துப் பறந்து செல்கிறது. சென்ற வண்டு பெண் மலரைச் சேர்கிறது. காற்றாலோ, களி வண்டாலோ கொணரப் பெற்ற மகரந்தம், தன்னில் தங்க, பெறுகின்றது கருவைப் பெண் மலர். கரு உருவாகிறது; காயாகிக் கனி கிறது. என்ன அற்புதம்!

மண்ணையும் இலையையும் உண்கிறது மண்ணுணிப் புழு. சுதந்தரமாக வாழும் அதனை, அறிவிலாக் கூட்டம் இரு துண்டம் ஆக்கும். ஆக்கினும் என்? அதன் ஒவ்வொரு துண்டமும் ஒவ்வொரு முழுப்புழுவாகி, உவந்து இனிது உலவுகின்றது!

தேனைச் சேர்த்துக் கூண்டில் அடைத்து, ஓங்காரம் பாடுகின்றது உயர் வண்டு.

மழை வரு நாளை முன்னரே மதித்து, சிறிது சிறிதாக உணவைச் சேகரித்து, வளைக்குள் வாழ்கிறது எறும்பின் கூட்டம்.

கூடு கட்டிக் குஞ்சு பொரித்து, அவைகளோடு கொஞ்சிக் குலவுகின்றன பறவைகள். உண்ணும் உண விற்கு உரியபடி, அலகும் காலும் அவைகட்கு அமைந் திருக்கின்றன.

கோழியின் கூவல்; குயிலின் கானம்; மயிலின் நடனம்; கிளியின் கொஞ்சல்; நாயின் நன்றி; பரியின் பாசம்; குரங்கின் ஆட்டம்; எருதின் உழைப்பு; கன்றின் துள்ளல்; ஆவின் உதவி முதலியன, தனி யின்பத்தை நமக் குத் தருகின்றன.

இறைவன் இனியன்; அவனது அருள் விளையாடல் பல; அவைகளுள் ஒன்று இந்த உலகம். உலகில் நிகழும்

மங்கையுமை தருசேயே, மன்றுள் வளர் பெருமானே
சிந்தை பலதடுமாறி, அங்கமிக மெலியாதே, அன்புருக அருள்வாயே

ஒவ்வொரு செயலிலும், அவனது அருள் முத்திரை அமைந்திருக்கின்றது. ஊறிய சிந்தனையால் இவைகளை உணர்ந்த ஆன்மா, இயற்கையின் உயிரான முருகனை யிறைஞ்சும். அதன் வழி, வர வரப் பக்குவம் வளரும்.

அருள்வடிவன் அந்த அமலன்; அவனை யடைந்து, என்றும் இன்பம் எய்தல் வேண்டும் என்னும் வேட்கை முறுகி எழும். ஆனால், உலகும் உடலுமான மாயை, வாழ்க்கை நிலை குலைய வந்த மோதும் வினைகள், அந்த வேட்கை நிறைவுறுதபடி இடையிருந்து பல தடை புரியும்.

இதை யறிந்த ஆன்மா, மனம் இடியும்; எண்ணாத தெல்லாம் எண்ணி யேங்கும்.

ஈசா! என்னை ஆளாயோ என்று வீறிட்டுக் கூவும்; உணர்வு கனிந்த அந்த அன்பின் அழைப்பை, ஏற்கின்றான் எங்கள் இறைவன்.

உதய ஒளி

இருள் விலகுகின்றது. அருள் மேனியன், ஒளி மேனியனாக உலகில் உதயம் செய்கிறான். அதற்கு ஏற்ப, குருபரன் என்ற பெயரையும் கொள்கிறான். அந்த ஐந் தெழுத்தின் நாமத்தான், விடுதலை விரும்பும் அன்பின் உயிரை, கனிந்த அருளோடு கடாட்சிக்கின்றான்.

இறைவன் அருள் நோக்கால் சஞ்சித வினைகள் சாம்பராகின்றன.

பருவுடல் கருவிகள் அறுபதும் பாழாகின்றன நுண்ணுடல் கருவிகள் எட்டும் நொறுங்குகின்றன. கீழ்

வேத கீத போத மோனமெய் ஞானாநந்த
முற்றி டின்ப முத்தி யொன்று தந்திடாயோ.

ஆதாரம் ஆறு; மேல் ஆதாரம் ஒன்று. அந்த ஏழு நிலங்கள், ஆன்மா சென்று தங்கும் இடங்கள். அந்த இடம் ஏழும் இப்போது இருந்த இடம் தெரியவில்லை.

இடம் ஏழும் சென்று வர, ஆன்மாவிற்கு அமைந்த வழிகள் ஆறு. அவ்வழிகள், அத்துவாக்கள் என்ற பெயர் பெறும். தத்துவம், கலை, புவனம், எழுத்து, பதம், மந்திரம் எனும் மகத்தான அந்த வழிகளும், இந் நிலையில் மறைந்து விடுகின்றன. என்ன வியப்பு! வினையும், அதன் வழி வந்த உடலும், உயிரிருந்த நிலமும், சஞ்சரிக்கும் வழியும் மறைய, குமர குருபரன் திருவுருவம் மட்டும் குறுநகை செய்து நிற்கிறது. அதனில் பிறந்த அற்புதப் பேரொளியால், உணர்வில் இருள் பரப்பும் ஆணவத் திரை கிழிகிறது.

அந்நிலையிலும் தன்னைத் தரிசிக்க அறியாமல், இத்துணை காலமாக உறவு பூண்டிருந்த உடலும், நிலமும், வழியும், எங்கு கரந்தன என்று திகைக்கின்றது உயிர்.

காட்டும் கருணை

எங்கும் உயிரின் அறிவு எல்லை யிட்டது; அம்மட்டோ! பாசத்தாலும் கட்டுண்டது; அந்த அறிவின் துணையால், ஆன்மா தன்னைக் காண இயலாது ஆதலின், காண்டற்குரிய மெய்ஞ்ஞானக் கண்ணை, கருணையொடு வழங்குகின்றான் ஸ்ரீ கந்தப் பெருமான்.

அடிக் கமலங்களே தனக்கு அரண்; இது, முன்னாள் உயிரின் உணர்வு. அந்த அடிமலர்களை இன்று அறியும் அறிவை அளிக்கின்றான் அத்தன்.

அதன் பின், மெய்ப் பொருளைக் காணக் காட்டுகின்றான் எங்கள் வேல் முருகன். இன்று காணும் இஃ

வாசன் தொழு தீன்புறவே மனுநூல் விளம்பிய கந்தவேளே
உன் திருகண்கள் ஈராறும் ஈராறு தீண்புயமுங் கொள்வேளே.

தொன்றே மெய்; மற்றவெல்லாம் பொய் என்பது, உயிர்க்கு இப்போது புலனாகின்றது.

இந்நிலையில் உன்னையும் காண் என்று, உயிரின் தன்மையையும் உள்ளவாறு காட்டுகின்றான் உமாசுதன்.

'தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடி' நான்; பரதந்திரன் நான்; இதனையறியா திருந்தேன் இத்தனை நாள் என்று உணர்கின்றது இந்நிலையில் உயிர்.

இங்கேபார்; இங்கேபார் என்று, தனது காப்பில் உள்ள உலக முழுமையையும் கூடக் காண்பிக் கின்றான் கதிரேசன்.

அவ்வளவில், அவனருளால் நிகழும் உலகம் இது என்பதை, அறிவொடு உணர்கிறது ஆன்மா.

இவ்வளவும் ஆனபிறகு, எல்லை யில்லாமல், இடையறாமல், எங்கும் நிறைந்த, பேரின்பத் தெளிவான தன் அருளமுதத் தன்மையையும், கருணையின் இயற்கையால் கார்த்திகேயப் பெருமான் காட்டுகின்றான்.

தனது சுதந்தரம் இல்லாத் தன்மையையும், உலக படத்தையும், தற்பரனது அருளொளித் திருவுருவையும் அறிந்து மகிழ்ந்த ஆன்மா, சிவன் செயலால் எவையும் செழிக்கும்; இதனையறியாமல் அவம் தரு நினைவால் அலமந்தேன்; ஆசைவெள்ளம் கவர்ந்து எனை இழுத்தது; அதனால் பவந்தனை மீட்டி மீட்டிப் பதைத்தேன். இந்நிலையனை என்னையும், தன் இயற்கைக் கருணையினால் என்று கொண்டான் எம்மான் என்று உணர்ந்து உருகும்.

காண்பார் யார்! கண்ணுதலாய்! நீ காட்டாக்காலே!! என்று விநயமொடு கைகூப்பி வணங்கும்.

அமுதம் பொழி பரையந்தரி உமை பங்கனுக் கொருசேயே
சுகசந்திர முகமும்பத அமுகுந்தமி யேனுக் கருள்வாயே.

கனிவொடு வணங்கும் உயிரின் பரிபாகங் கண்டு, இறத்தல் பிறத்தல்; நினைத்தல் மறத்தல்; பகல் இரவு எனும் வேறுபாடுகளைக் கடந்துள பேரின்பத்தில், அவ்வுயிரைச் சேர்க்கின்றான் செவ்வேள் பெருமான்.

இவ்வளவு சிறந்த செய்திகளை, சுருக்கமான சில அடிகளில், குமர குருபரர் கூறும் அழகு, நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. பயனை பின்வரும் அடிகளைப் படித்துப் பாருங்கள்.

கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு - திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி, உடல் அறுபத் தெட்டும், நிலம்
ஏழும், அத்துவாக்கள் இருமூன்றும்—பாழாக;
ஆணவமான படலம் கிழித்து, அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி;—பூணும்
அடிஞானத்தால் பொருளும், ஆன்மாவும் காட்டி ;
கடியார் புவனமுற்றும் காட்டி;—முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுதமாகி எங்கும்
நீக்கம் அறநின்ற நிலைகாட்டி;—போக்கும்
வரவும்; நினைப்பும், மறப்பும்; பகலும்,
இரவும் கடந்துலவா இன்பம்—மருவுவித்து.

[ஊழ்வினை-முன்னை வினை; இது, சஞ்சித கன்மம் எனப்பெறும்.' 'விரிந்த சஞ்சித வினைகள் அன்புடன் நாம் விழிக்க வெந்தன' என்பது, திருவாத வூரடிகள் புராணம். உடல் அறுபத்தெட்டு - ஸ்தூல தேககருவிகள் அறுபது, சூக்கும தேக கருவிகள் எட்டு; ஆக இரண்டும் கூட்டி அறுபத்தெட்டு எனப் பெற்றது. நிலம் ஏழு-ஏழு ஆதார கமல நிலங்கள். அத்துவாக்கள்-வழிகள். பாழாக-ஒன்றும்

அம்புதனை முன்தொடுத்த கோண்டல தீறல் செங்கணைச்சு தன்றன்
மிகவிஞ்சு பொற்ப தங்கள் தருவாயே. [மருகோனே.

இல்லையாக; சூனியமாக. படலம் - திரை; பூணும்-பற்றி யிருக்கும். அடி ஞானம்-திருவடி தரிசன அறிவு; பொருள்-மெய்பொருள்; இது, சொருபகிலே. ஆன்மாவும்-உயிரின் இயல்பையும்; கடி-காவல்; ஆர்-நிறைவு; முடியாமல்-எல்லை இலாமல்; தேக்கும்-நிறைந்த; போக்கு- இறப்பு; வரவு-பிறப்பு; உலவா - கெடாத;நித்தியமான. மருவுவித்து - கலக்கச் செய்து]

ஆய்வு நூலார்.

206 எலும்புகள்; 555 தசைகள்; 25,00,000 வியர் வைக் கோளங்கள்; 33 அடி உணவுக் குழாய்கள்; 250 அடி காற்றடங்கும் கனமான பை; 670 அங்குலம் விரிக்க உள்ள மூளை யறைகள் முதலியன, இவ்வுடம்பில் இருக் கின்றன என்று உரைக்கின்றார்கள் உடல் நூல் ஆய்வினர்.

அஃதிருக்கட்டும்! உள்ளம் துடிப்பதும், உணவின் சாரம் இரத்தமாகச் சிவப்பதும், பிராணன் உயிர்ப்பதும், மூளை சிந்திப்பதும் எதனுல் என்பதை, இன்றுவரை அவர் கள் ஐயம் திரிபற அறிவித்ததில்லை.

இவைகளை, உள்ளக் கண் கொண்டு உணர்ந்து உரைத் தவர்கள் அநுபூதிமான்கள்.

புறக் கருவிகள்

மயிர், தோல், தசை, எலும்பு, நரம்பு முதலிய மண்ணின் கூறு 5

இரத்தம், விந்து, சிறுநீர், மூளை, கொழுப்பு ஆதிய நீரின் கூறு 5

உணவு, உறக்கம், அச்சம், புணர்ச்சி, சோம்பல் எனும் தீயின் கூறு 5

விடுசங் கையற்று ணர்ந்து வலம்வந் துளைப்பு கழ்ந்து
மிகவிஞ்சு போற்ப தங்கள் தருவாயே.

(இருத்தல், நிற்றல், கிடத்தல், நடத்தல்,
ஓடல் கொண்ட)

பிராணன், அபானன், வியானன், உதானன்,
சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன்,
தனஞ்செயன் எனும் வாயுக்களான காற்றின் கூறு 10

காமம், குரோதம், லோபம், மோகம், மதம் 5

(ஷையனவற்றை வெளியாக்கும் அத்தி, அலம்
புடை, இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, குகுதை,
சங்கினி, சிகுவை, புருடன் எனும் நாடிகளான
விண்ணின் கூறு 10

வசனம், கமனம், தானம், விசர்க்கம்
ஆந்தம், எனும் தொழில் கருவிகளின் தொழில் 5

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் தன்
மாத்திரைகள் 5

சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனும்
வாக்குகள் 4

சாத்விதுகம், இராசதம், தாமசம் எனும் குணங் 3
கள் தைசதம், வைகாரிகம், பூதாதிகம் எனும்
அகங்காரங்கள் 3

ஆகப் பருவுடல் கருவிகள் 60

அதனுடன் பூதம் ஐந்தின் நுட்பம் 1
தன் மாத்திரை ஐந்தின் நுட்பம் 1
தொழில் கருவி ஐந்தின் நுட்பம் 1
தொழில் நுட்பம் 1

அம் பொன்முடி சுந்த ரந்திருப் பாத பங்கயமும்
என்றன் முந்துறத் தோணி புன்றனது சிந்தை தாராய்.

அறிகருவிகள் ஐந்தின் நுட்பம்	1
கரண நுட்பம்	1
நிவர்த்தி, பிரதிட்டை, வித்யா, சாந்தி, சாந்தியாதிதை எனும் கலை ஐந்தின் நுட்பம்	1
பிரகிருதி மாயையின் நுட்பம்	1
ஆக நுண்ணுடல் கருவிகள்	8

எனவே, தூல சூக்கும கருவிகள் அறுபத்தெட்டு எனப் பெறுகிறது.

மேலுரைத்த காற்றின் கூறான பத்து வாயுக்கள், விண்ணின் கூறான, பத்து நாடிகளைத் தொழில் படுத்தும்; அதன்பின் பத்து நாடிகளும் இந்த உடலை இயக்கும்.

விழிப்பில் விளங்கும் இந்தப் புறக் கருவிகள், நான் எனும் உணர்வால் நடைபெறும்; எப் பொருளையும் காணும்; கண்ட பொருள்களை அடைய முயலும்; ஐம்பூத உறவுகொண்டு அமையும்.

அகக் கருவிகள்

இவ்வுடலில் இருக்கும் முக்கியமான தத்துவங்கள் மூன்று: அவை, ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் எனப்பெறும்.

விண், காற்று, தீ, நீர், மண் எனும்	5 பூதங்கள்
சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும்	5 தன்மாத்திரைகள்
கண், காது, நாக்கு, மூக்கு, தோல் எனும்	5 அறிகருவிகள்

உடல் துஞ்சிய மன்பதியே புகுந்துய
ராழ்விடும்படி. சீர்பதம் பெற விஞ்சை தாராய்.

கால், கை, வாய், எருவாய், கருவாய் எனும்5 தொழில் கருவிகள்

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் 4 கரணங்கள்

ஆக, இந்த 24-ம் **ஆன்ம தத்துவங்கள்** எனப் பெறும்.

காலம், நியதி, கலை, வித்தை, விருப்பம், புருடன் மாயை எனும் 7ம் **வித்தியா தத்துவங்கள்**

தூய அறிவு, ஆட்சி, என்றும் ஒன்றல், விந்து, நாதம் எனும் 5ம் சிவ தத்துவங்கள்

நமது முதுகெலும்புள் பின்னிய நரம்புகள், உயர்தரு ஆற்றலை யுடையன. அந்நரம்புகளின் நடுவில், இடை, பிங்கலை சுழுமுனை யெனும் நாடிகள் செல்கின்றன. அந்த நரம்புப் பின்னல்கட்டு ஆதாரங்கள் என்று பெயர் அமைந்துளது. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை யென்பது அந்த ஆதாரங்களின் பெயர்கள்.

குறிமுதல் புருவ நடுவரை அடுக்கு மாடிகள்போல் இருக்கும் இவைகள், கீழ் ஆதாரங்கள்.

1000ம் றுட்பம் அமைந்த நரம்புப் பின்னல்கள் உள்ள ஒன்று, சகஸ்ராரம் என்ற பெயருடன் தலை உச்சியில் உளது. அது, மேலாதாரம் எனப் பெறும்.

முன் குறித்த கருவிகளோடு மாயை செய்த செயலால், ஆன்மாக்கட்கு உதவும் ஆறு வழிகள் உள. அத்துவாக்கள் எனப்பெறும் அவ் வழிகளில், புவனம் தத்துவத்தைப் பற்றி நிற்கும்; தத்துவம் கலையைப் பற்றி நிற்கும்; எழுத்தும், பதமும், மந்திரமும், புவனத்தில் எழுந்து

நின் அன்பருக்குச் செயல் தொண்டு பட்டுக் கமழ்
குங்குமத் திற்சரணம் பிடித்துக்கரை என்று சேர்வேன்.

உடலைப் பற்றி நிற்கும். இவைகளை மேலும் விரிக்கிற் கடல் போற் பெருகும்.

வினைக் கூட்டம், பருவுடல், நுண்ணுடல், கருவிக் கூட்டம், ஏழுநிலம், ஆறு வழிகள் என்றும் இந்த ஆரவாரம் எல்லாம், குமர குருபரன் திருநோக்கால் ஒன்றும் இலவாயின. அதன்மேல், ஆணவம் அகற்றினன்; மெய்ஞ் ஞானம் மேவவைத்தான்! காட்ட வேண்டுமவற்றை யெல்லாம் காட்டினன். இறுதியில் இன்ப அநுபவத்தைச் செய்கிறன் எங்கள் இறைவன் என்று, சொருபதரிசன அநுபவம் எல்லாம் நாவூறச் சொல்கின்றார் குமரகுருபர நாவலர். இவைகளை என்ன உள்ளம் உருகுகின்றதே!

சிவ தரிசனம் செய்வித்து, ஜீவன் முத்தரொடு உயிரைச் சேர்ப்பிக்கும் அத்தன் அருள் விலாசத்தை, தமக்கே உரிய தமிழில் நயமொடு நவிலும் இனிய பகுதியை அடுத்த இதழிற் காண்பம்.

உ

கந்தரனுபூதி

(திரு. தங்கவேல் தேவர், அம்பாரம் பாளையம்)

வானோ புனல்பார் கனன் மாருதமோ
ஞானோ தயமோ நவினுன் மறையோ
யானோ மனமோ வெனையாண்ட விடந்
தானோ பொருளாவது சண்முகனே.

இ- ள். (அடியேன் அடைந்த ஆனந்த நிலையின் ஸ்வரூபம்) ஆகாயமா - நீரா, பூமியா - நெருப்பா, வாயுவா அல்லது ஞானத்தின் ஆரம்பமா? (ஆன்மார்த்த விசேஷங்களே மிகுதியும்) சொல்கின்ற வேத (மந்திரங்களா) அதுவு

கருணைநெறி புரியும் அன்பர்க் கெளியோனே
பரவு தரிசனையை யென்றெற்கருள்வாயே.

மன்றுயின் நானு மனமா? (மேற்சொல்லப் பட்டவைக ளெல்லாமல்லவாயின், அடியேனை அன்புடன் ஆதரித்து கருணையுடன்) ஆட்கொண்ட விடமா? (எதுவென்பதாக) அறுமுக தேசிகா விளக்கியருள்வாயாக என்பதாம்.

இவ்வனுபூதியால் ஸ்ரீ அருணகிரிநாத ஸ்வாமிகள் சாதனையிலுண்டாகுந் தோற்றங்களும் உண்மையானந்தத் தின் தன்மையும் விவரிக்கின்றுர்.

ஆனந்தநிலை நாடி அந்தர் முகமா மத்தக வழியிற் செல்லும் சாதகர்களுக்கு தங்களது ஐம்புலன்களும் அடங்கின சமையம், முதன் முதலில் தென்படுவது, ஆனந்த நிலையின் சிறு திவலையென்று சொல்லத்தக்க சிறிது நிம்மதியும் சிதாகாயமும்தான். அது சமையம், முதல் முதல் உண்டாவதால், தனது ஆத்மா பிரிந்து விடுமோ என்ற பயத்தால் உடனே புலனெருமைப்பாடு கலந்த மாத்திரம் தோன்றின சிதாகாயம்தான் ஆனந்த நிலையோவெனில், அல்ல வென்பது தோன்ற, வானே என் றுர். முன்னல் ஏற்பட்ட சிறிது நிம்மதியும் கலந்தவுடன் தூலப் பொருளாக விளங்கும் ஜலம், மண், நெருப்பு முத லாகிய பூதங்கள் சஞ்சல வடிவமாகத் தோன்றுமாதலால், அதில் ஆனந்தமென்பது அணுவளவுமில்லை யென்பது தோன்ற புனல்பார் கனல் என்பதாக ஒருகுறிப்பும் இல் லாது கூறினர்.

வீண் சஞ்சலங்களே தோன்றி முன்னல் உண்டான சிறிது நிம்மதியும் இல்லாமற் செய்கின்றதே, இதற்கு என்ன செய்வேன் குருநாதா என்பதாக தியானித்து மூச்சை யிழுத்தும், அடக்கியும், விடுத்தும் முயற்சிக்கின்ற

திருந்தா கர்த்தத் துவநேசா, நினைத்தார்சித்தத் துறைவோனே
வருத்த மற்றெப் பிதைான மலர்த்தாள் வைத்தெத் தனையாள்வாய்.

வாசி யோகத்தால் சிதாயகாயம் தோன்றுவது போல் காணுகின்றதே ஒழிய அந்த வாசி யோகத்தாலும் நிம்மதி யில்லையென்பது தோன்ற மாருதமோ என்றார்.

இவ்வாறு பஞ்ச பூதங்களையும் ஆராய்ந்து அதன் தன்மைகளைத் தெரிவதற்கு ஆதாரமாகவுள்ளது ஞான மல்லவா. அந்த ஞான விளக்கத்தாலும் நிம்மதியில்லை என்பார். ஞானோதயமோ என்றார்.

இன்னும் ஆனந்த நிலையில்லையே என்று தேடும்போது தான், கண்டும் கேட்டும் அறியாத வசனங்கள் தென்படும். அதுகாலை வேத மந்திரங்களில் ஆன்மார்த்த விஷயங்கள் மிகுதியும் சொல்லப்பட் டிருக்கிறதே, அம்மந்திர நாம மாகத் தான் கண்ட வசன ஜப தியானங்களினாலும் நிம்மதி யில்லை யென்பார், நவினான் மறையோ என்றார்.

இவ்வாறு ஒவ்வொரு விஷயங்களும் நாமல்லவா ஆராய்ந்து அறிகின்றோம். ஆதலால் நம்மைத் தெரிந்தால் ஆனந்த நிலை அடையலாம் என்று தன்னைத் தேடிச் செல் லும்போது, இரசம் பூசப்பட்ட கண்ணாடியில் தனது தூல தேகம் தெரிவதுபோல் ஆனந்த நிலையிலிருந்து அலை வீசு வது போன்ற நிம்மதியுடன் சூட்சும தேகம் தோன்றின மாத்திரம் தன்னையறிந்தோம் என்ற ஞாபகம் வர, அந்த நிலையும் கலைய, அதிலும் நிம்மதியில்லை யென்பது தோன்ற யானோ வென்றார். ஆயின் இவ்வாறு ஏற்படும் நிலைக ளெல்லாம் மாறுபடுவதற்கு மனமல்லவா காரணம். இம் மனம் ஒடுங்கும் உபாயம் என்ன என்று விசாரித்துச் செல்லச் செல்ல சித்தப்பிரமம் (உலகம் பயித்தியம் என் னும்படி) ஏற்படும். அச் சித்தப்பிரம்மம்தான் ஆத்ம குரு

முத்திக்கு மரு வின்பத்தடத்தே
குலக்கால் வற்றச் சிவஞானம் பெற பொற்கழல் தாராய்.

DR U V
BESANT N... MA

தேவாரது அருளால் விலகுமே ஒழிய, மற்றொன்றால் மாறாது. அவ்வித குருவருளால் மாறினவுடன் அம்மனத்தாலும் நிம்மதியில்லை யென்பார் மனமோ என்றார்.

இதுகளெல்லாம் அல்லவே. அவ்வானந்தப் பொருளாவது எங்கே. எதுவென்று ஆராயுங்கால், ஞான தண்டபாணியே நித்யானந்தர் என்ற திருநாமத்தோடு தரிசனந் தந்து, ஆட்கொண்ட குருநாதன் கருணையே ஆனந்த நிலை என்பது தோன்ற, எனையாண்ட விடம் தான் ஓ தான் என்னும் தத்துவநிலை குறிக்கும் நிச்சயப் பொருள்தரும் வார்த்தையும் ஆனந்த நிலையின் தன்மையும் தெரிந்தது என்ற சிறப்பும்தோன்ற, எனையாண்ட விடந்தான் ஓ பொருளாவது என்று தெரிகிலை ஓகாரத்தோடுங் கூறினார்.

இன்னும் அவ்வானந்தத்தின் பொருளை விளக்கமாகச் சொல்ல வேண்டுமாயின், தனது குருநாதர் ஆறுதாரப் பொருளாகவுள்ள அறுமுகக் கடவுளே என்பார். பொருளாவது சண்முகனே என்றார்.

இன்னும் இவ்வனுபூதியின் விரிவை :

தேனென்று பாகென் றுவமிக் கொணாமொழித்
தெய்வ வள்ளி
கோனன் றெனக்கு பதேசித்த தொன் றுண்டு
கூற வற்றே
வானன் று காலன் று தீயன் று நீரன் று
மண்ணு மன் று
தானன் று நானன் றசரீரி யன் று
சரீரி யன்றே.

என்னும் கந்தரலங்காரச் செய்யுளிலும் கண்டு நோக்குக.

கூறுமடியார்கள் வினை நீறுபடவே அரியகோலமயிலான பதமருள்
மோடனை நின் ஞான சிவமான பத மருள்வாயே. [வோனே

குறிப்பு. அடியேனது குருநாதன் ஸ்வாமி நித்யானந்தர் என்ற புனைப்பெயருடன் அருள் செய்தார். அனுபவத்தில் அடியேனுக்குத் தென்பட்டது ஞானதண்டபாணியென்னும் வேதமந்திரம். ஆதலால், ஞானதெண்டபாணியே நித்தியானந்தராக வந்தார் என்றனன்.

ஆயின் இவ்வனுபூதியை ஆராயுங் கல்வியறிவு அடியேனுக்குக் கிஞ்சித்தும் இல்லையென்பதை யந்தரங்க பூர்வமாக வொப்புக்கொள்கின்றேனெனினும் பரம குருநாதன் திருவருள் பெற்ற மெய்யன்பர்கள் தங்கள் தங்கள் ஞானதேசிகரது உத்திரவுப்படி, சாதனை செய்துவரின், குருதேவரது அனுக்கிரக பலத்தால் ஒவ்வொருவரும் இவ்வனுபூதியின் பொருளுண்மையை ஐயந்திரிபறத் தாங்களே கண்டு ஆனந்த நிலையடைவது திண்ணம் என்பது அடியேனது தாழ்மையான கோரிக்கை. மதியிலா உரையாயின் மன்னிக்க வேண்டுகின்றேன்.

ஆடும் மயிலோன் அருள்வழி பரவுக.

சுபம்

இலங்கையில் 'அமிர்தவசனி'

கிடைக்குமிடங்கள் :—

இன்ப நிலையம், ஸ்டேஷன் ரோடு, சுன்னுகம்

எவரெஸ்டு டீ ரூம், ஸ்டேஷன் ரோடு, யாழ்ப்பாணம்

M. துரை ராஜா, நியூஸ் ஏஜண்டு, உடுவில், சுன்னுகம்

இலங்கையில் தனிப் பிரதி விலை 20 சதம்

வருடச் சந்தா ரூ. 2/25

தளர்ந்து நோய் வினை வந்துடல் மூடக் கலங்கிடா
மதிதந்து அடியேனைப் புரந்திடாயுன தருளாலே.

'ஊனுக்குள் நீ நின்று
உலாவினதைக் காணுமல்
நானென்று இருந்து
நலம் அழிந்தேன் பூரணமே'
(பட்டினத்தார்)

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலை' நஞ்சன்கூடு

I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு
I.D.L.71 பிமெலக்ஸ் ரக்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெரு பலஹீனம் மயக்கந்தீர்க்க
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதக உபாதைக்கு
I.D.L.91 யூடிரூல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

குழந்தைகளுக்கு
I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (மெடிகேடட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன நைலம்
I.D.L.55 ஜீர்சிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

தபால் பில்லையும், தங்கள் விலாசமுள்ள கவருடன் வியாதி விபரம் எழுதி, எங்கள் வைத்தியரால் தபால்மூலம் சிகிச்சை பெறவும்

ஸோல் ஏஜெண்டுகள்
யுனைடெட் கன்ஸர்ன்
54. பந்தர் தெரு :: மதராஸ்.1

No. 1506
அசோகா
MILD SCENTED ASOKA
நெ. 1506

Regd. M. No. 5390 Amirthavachani

ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்பு பெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel:—"FAITH' Estd: 1924 Phone:—113

வியாபாரக்குறி

N. K. M.
தங்கநாடா



நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு. நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—18
Edited & Published by S. M...